Reg. No. 1-M.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

DECEMBER 9, 1930.

நெ. 49.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம் ௵ டிசம்பர் ௴ 9௳. [PRICE, 1 *anna*.

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

பப்ளிக் டிபார்ட்மென்ட்.

(மிலிடரி.)

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ நவம்பர் ௴ 11௳ (1478-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 15.—ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது ஏற்படுத்தப்படும் இந்திய காரிஸன் கம்பெனிகளையும் ட்யூடி (Duty) கம்பெனிகளையும் ஒழுங்காய் அமைப்பதற்காகவும் அவ்வவ்விடத்துக்குப் பிரித்து அனுப்புவதற்காகவும், இந்தியா கவர்ன்மென்டார் தங்களுடைய ஆர்மி டிபார்ட்மென்டில் 1930-ம் ௵ அக்டோபர் ௴ 20௳ இந்தியாவிலுள்ள அட்ஜுடன்ட் ஜெனரலவர்களுக்கு எழுதிய A43320/14 (A. G-2) நெ. கடிதத்தில் அனுமதித்திருக்கும் ஏற்பாட்டைப்பற்றி இந்த உத்தரவுடன் சேர்த்திருக்கும் 1-ம், 2-ம் அனுபந்தங்களில் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது.

1-ம் அனுபந்தம்.

1. அவசியம் ஏற்பட்டுக்கொண்டுவரும்போதும் அவசியம் ஏற்படும்போதும் சிறப்புற்றோங்கும் கம்மாண்டர்-இன்-சீவ் அவர்களின்கீழ் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவதற்காக இந்தியா கவர்ன்மென்டாருடைய உத்தரவின்படி 38 கம்பெனிகளுக்கு மேற்படாமல் இந்திய காரிஸன் கம்பெனிகள் ஏற்படுத்தப்படும்—

கம்பெனிகள் கீழேகண்டபடி பிரித்து அனுப்பப்படும் :—

(a) கம்மாண்டுகள் முதலியவைகளுக்குப் பங்கீடு செய்யப்படுபவை—

நார்தெர்ன் கம்மாண்ட்.	11	
ஸதெர்ன் கம்மாண்ட்.	7	
ஈஸ்டெர்ன் கம்மாண்ட்.	2	
வெஸ்டெர்ன் கம்மாண்ட்	1	
பர்மா டிஸ்ட்ரிக்ட் ...	1	= 22
(b) அவசியமாயிருந்தால் பிற்பட்டு ரிஸெர்வாகச் சேர்த்துப் பங்கீடு செய்யப்படுபவை		16
மொத்தம் ...		38

(c) ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்காகச் சித்தப்படுத்துவதன்மேல் (Field Army) பீல்ட் ஆர்மி என்னும் யுத்த களத்துக்குப் போகும் சேனையைச் சேர்ந்த யூனிட் என்னும் படை வகுப்புகளை வரவழைத்துக்கொள்ளும்போது, இந்தியா - பர்மா ஆகிய இவை முழுவதிலும் உள்ள பெரிய ராணுவ ஸ்டேஷன்களில் காரிஸன் வேலைக்காகவும் இதர வேலைகளுக்காகவும் அந்த யூனிட்டுகளுக்குப் பர்த்தியாக அமர்வதே இந்த காரிஸன் கம்பெனிகள் செய்யவேண்டிய வேலையாகும்.

வாஸ்தவத்தில் இத்தனை கம்பெனிகளை ஏற்படுத்தவேண்டுமென்பது அப்போதைக்கப்போது இருக்கும் நிலைமையைப் பொறுத்ததாகும். ஒவ்வொரு கம்பெனியையும் கூட்டி யுத்

தத்துக்குச் சித்தப்படுத்தும்படிச் செய்யும் உத்தரவுகள் - ஆர்மி ஹெட் க்வார்ட்டரிலிருந்து (ராணுவத் தலைமை ஸ்தானத்திலிருந்து) சம்பந்தப்பட்ட கம்மாண்ட் அல்லது டிஸ்ட்ரிக்டுக்குத் தெரிவிக்கப்படும்.

ஒவ்வொரு காரிஸன் கம்பெனிக்கும் நம்பர் கொடுக்கப்படும். மேலும், எந்த ரெஜிமென்டின் (பட்டாளத்தின்) ட்ரெய்னிங் பட்டாலியன் என்னும் பயிற்சி செய்விக்கும் படைவகுப்பு அந்தக் கம்பெனியைச் சேர்ப்பதற்கு உத்தரவாதியாயிருக்கிறதோ அந்த ரெஜிமென்டின் பெயர் அதற்குக் கொடுக்கப்படும். அந்தப்படி கொடுக்கும்போது, "காரிஸன் கம்பெனி" என்னும் வார்த்தைகள் ஷை ரெஜிமென்டின் பெயருக்கு முன்பாக அமைக்கப்படும்; உதாரணமாக, 1-ம் நெ. காரிஸன் கம்பெனி, 1-வது பஞ்சாப் ரெஜிமென்ட் முதலியவை.

ட்ரெய்னிங் பட்டாலியனுனது ஏககாலத்தில் ஒரு காரிஸன் கம்பெனிக்கு மேற்பட்டுச் சேர்க்கவேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை.

2. இந்திய இன்பன்ட்ரி அண்ட் பயனீர்ஸ் என்னும் படையைச் சேர்ந்த ட்ரெய்னிங் பட்டாலியன் ஒன்றுக்கு ஒரு கம்பெனி வீதம் இந்திய ட்யூடி கம்பெனிகளும் - ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது சிறப்புற்றோங்கும் கம்மாண்டர்-இன்-சீவ் அவர்கள் பிறப்பிக்கும் உத்தரவின்படி சேர்க்கப்படும். இந்த யூனிட்டுகள் ட்ரெய்னிங் பட்டாலியன்களைச் சேர்ந்த ஒரு பூரணமான பாகமாகும். அவைகளைக் குறிப்பிடும்போதெல்லாம் "ட்யூடி கம்பெனி, ரெஜிமென்ட்" என்று குறிப்பிடப்படும்.

போர்ச் சேவகத்துக்குப் போகும் பட்டாலியன்களிலிருந்து நிறுத்திக்கொள்ளப்பட்ட ட்யூடி ஸிப்பாய்கள் சமாதான காலத்தில் சகஜமாய்ச் செய்துவரும் அலுவல்களைப் போன்றவைகளாய் யாதொரு ட்ரெய்னிங் பட்டாலியனில் வாலாயமாகச் செய்யப்பட்டுவரும் அலுவல்களைச் செய்வதே இந்த ட்யூடி கம்பெனிகளின் வேலையாகும். இந்தப்படி அந்தக் கம்பெனிகளை யுத்த காலத்தில் ஏற்படுத்துவதனுல், கிரமமான சேனையில் சேர்ந்திருப்பவர்களை யுத்த சம்பந்தமான இன்னும் முக்கியமான வேலைகளில் அமர்த்திக்கொள்ளும்பொருட்டு விடுவிப்பது சாத்தியமாயிருக்கும்.

3. ஊழிய சம்பந்தமான இன்ன ஷரத்துகளின்படியும் திட்டங்களின்படியும் இந்திய காரிஸன் கம்பெனிகளையும் ட்யூடி கம்பெனிகளையும் சேர்ந்த நபர்கள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவார்களென்று 2-ம் அனுபந்தத்தில் காட்டியிருக்கிறது. அந்தந்த சந்தர்ப்பத்தை அனுசரித்து, சிறப்புற்றோங்கும் கம்மாண்டர்-இன்-சீவ் அவர்கள் பிறப்பிக்கும் உத்தரவின்படி சகாயகரமான திட்டங்கள் வெளிவிடப்படலாம்.

4. யாதொரு இந்திய காரிஸன் கம்பெனியிலும் யாதொரு இந்திய ட்யூடி கம்பெனியிலும் இன்ன சிப்பந்தி இருக்கவேண்டுமென்று இந்திய யுத்த சிப்பந்தி என்னும் புத்தகத்தில் விதித்திருக்கிறது. இந்திய ட்யூடி கம்பெனியைச் சேர்ந்த சிப்பந்தியைக் குறித்து இந்திய இன்பன்ட்ரி அண்ட் பயனீர்ஸ் என்னும் படையைச் சேர்ந்த ட்ரெய்னிங் பட்டாலியனின் சிப்பந்தி என்னும் தலைப்பின்கீழ் விவரித்திருக்கிறது.

5. இவ்வளவுமட்டில் பணம் செலவழிக்கலாமென்பதைக் குறித்து, எவையேனும் இந்திய காரிஸன் கம்பெனிகளாகிலும் ட்யூடி கம்பெனிகளாகிலும் ஏற்படுத்தப்படும்போது சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் விசேஷ உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

2-ம் அனுபந்தம்.

1. **ஆள்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்வது.**—ஆள்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்ளும் காரியத்துக்காகவும், சேகரிக்கும் காரியத்துக்காகவும், சிப்பந்தியில் சேர்த்துக்கொள்ளும் வரையில் அவர்களைப் பராமரித்துவரும் காரியத்துக்காகவும், இந்திய காரிஸன் கம்பெனிகள் - இதன் பின்னே கண்டிருக்கும் ஸ்டேட்மென்டில் குறிப்பிட்டுள்ளபடி இந்திய இன்பன்ட்ரி அண்ட் பயனீர் ட்ரெய்னிங் பட்டாலியன்கள் என்னும் பட்டாளங்களுடன் சேர்க்கப்படும்.

2. **சமாதான காலத்தில் ரெஜிஸ்டர் செய்வது.**—ட்ரெய்னிங் பட்டாலியன்களின் கம்மாண்டிங் ஆபிஸர்கள் - இந்திய ஆபிஸர்களாயும் படைவீரர்களாயுமிருந்து காரிஸன் கம்பெனிகளிலாவது ட்யூடி கம்பெனிகளிலாவது ஊழியம் செய்வதற்குத் தகுந்தவர்களாயும் இஷ்டமுள்ளவர்களாயும் இருப்பவர்களைக்குறித்த விவரங்கள் அடங்கிய ரெஜிஸ்டர்களைச் சமாதான காலத்தில் வைத்துவரவேண்டும். ஒவ்வொரு கம்பெனிக்காகவும் தனித்தனியாய் ரெஜிஸ்டர் வைத்துவரவேண்டும். ரெஜிஸ்டர் செய்யப்படுவதன்மேல் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. மேலும், அவர்களைச் சேவகத்துக்கு நிறுத்திவைத்திருப்பதற்காகக் கட்டணம் எதுவும் கொடுக்கத்தக்கதாகமாட்டாது.

ரெஜிஸ்டர் செய்யும்போது உபயோகிப்பதற்காக (ஐ. ஏ. எப். எப்.-942), ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது அவர்களை அழைப்பதற்காக (ஐ. ஏ. எப். எப்.-941-A) என்னும் பிரத்தியேகமான நமூனுக்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இண்டென்ட் செய்வதன்மேல் அவை ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு சர்ப்பரா செய்யப்படும்.

3. **ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது அனுசரிக்கப்படும் நடவடிக்கை முறை.**—(a) பொதுவாக ஆள்களைக் கூட்டி யுத்தத்துக்குச் சித்தப்படுத்தும்போது, ட்ரெய்னிங் பட்டாலியனின் கம்மாண்டிங் ஆபிஸரானவர் - தம்முடைய ட்ரெய்னிங் பட்டாலியனைச் சேர்ந்த ட்யூடி கம்பெனியுடன் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் நபர்கள் எல்லோரையும் உடனே அழைக்கவேண்டும். வேலையில் சேருகிற தேதியிலிருந்து அவர்கள் அந்த ட்ரெய்னிங் பட்டாலியனைச் சேர்ந்தவர்களாவார்கள். மேலும், கம்மாண்டன்டுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபட்சத்திலே, அவர்கள் - போர்ச்சேவகத்துக்குப் போகும் பட்டாலியன்களிலிருந்து நிறுத்திக்கொள்ளப்பட்ட ட்யூடி ஸிப்பாய்கள் சகஜமாய்ச் செய்துவரும் வாலாயமான அலுவல்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(b) அப்பிரகாரம் செய்யும்படி நிஷ்கரிஷையான உத்தரவுகள் வரப்பெற்றுக்கொள்வதன்

மேல், ட்ரெய்னிங் பட்டாலியன் கம்மாண்டிங் ஆபிஸரானவர் - தம்முடைய ட்ரெய்னிங் பட்டாலியனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் காரிஸன் கம்பெனிக்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள நபர்களை அழைக்கவும் வேண்டும். மேலும், அவர்களை அவர்களுடைய அலுவல்களைச் செய்வதற்குத் தகுதியானவர்களாக்குவதற்கு எம்மட்டில் பயிற்சி செய்விக்கவேண்டுமோ அம்மட்டில் பயிற்சி செய்விப்பதற்கும் அவர் உத்தரவாதியாவார். யாதொரு காரிஸன் கம்பெனியானது இது காரியத்துக்குத் தகுதியாயிருக்கிறதென்று பிரதேச ஜெனரல் சீவ் கம்மாண்டிங் ஆபிஸர் அபிப்பிராயப்பட்டால், எந்த ஸ்டேஷனில் அது வேலை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறதோ அந்த ஸ்டேஷனுக்குப் போகும்படி அதற்கு உத்தரவு செய்யலாம்.

ட்ரெய்னிங் பட்டாலியன் கம்மாண்டிங் ஆபிஸரானவர் - ஷை காரிஸன் கம்பெனியில் எத்தனை பேர் இருக்கவேண்டுமோ அத்தனை பேர் இருக்கும்படி பார்த்துக்கொள்ளும விஷயத்தில தவிர மற்றப்படி, ட்ரெய்னிங் பட்டாலியன்- ஸ்டேஷனை விட்டுப் போன பிறகு மறுபடியும் அங்கே அது வந்து சேருகிறவரையில் அந்தக் கம்பெனியைப் பொறுத்தமட்டில் எவ்விதமாகவும் உத்தரவாதியாகமாட்டார். காரிஸன் கம்பெனியுடன் ட்யூடி செய்வதற்கு ஸிப்பாய்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவர் முற்றிலும் யுக்தானுசாரப்படி நடந்துகொள்ளலாம்.

4. அர்ஹதை.—உத்தியோகத்திலிருந்து அனுப்பிவிடப்பட்டவர்களாயிருந்தாலுஞ்சரி பென்ஷன் பெற்று விலகினவர்களாயிருந்தாலுஞ்சரி, ரிஸெர்விஸ்டுகளாயிருந்தவர்கள் உட்பட இந்திய ஆபிஸர்களாயிருந்தவர்கள், படைவீரர்களாயிருந்தவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் நல்ல நடத்தை உள்ளவர்களாயும் இந்தியாவிலாவது பர்மாவிலாவது ஊழியம் செய்வதற்கு வைத்திய பரிசோதனைப்படி தகுதியானவர்களாயும் இருக்கும் பட்சத்தில், அவர்கள் இந்திய காரிஸன் கம்பெனிகளிலாகிலும் ட்யூடி கம்பெனிகளிலாகிலும் வேலையில் மறுபடியும் அமர்த்திக்கொள்ளப்படுவதற்காயினும் மறுபடியும் தாக்கல் செய்யப்படுவதற்காயினும் தகுதியுள்ளவர்களாவார்கள். ரிஸெர்விஸ்டுகளாயிருந்தவர்களையும் பென்ஷன் பெறுபவர்களையும் தவிர மற்ற ஆபிஸர்களும் ஸிப்பாய்களும் யுத்தகளத்தில் ஊழியம் செய்வதற்கு வைத்திய பரிசோதனைப்படி தகுதியானவர்களாயிருந்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்; ஏனென்றால், அவர்களை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், யுத்த ஊழியத்துக்காகப் புதிதாய் ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்குப் பிரதிகூலமாய் பாதகம் ஏற்படக்கூடும். இந்தக் கம்பெனிகளுக்காகப் பெயர்களை ரெஜிஸ்டர் செய்யும்போது, பென்ஷனர்களின் பெயர்களும் ஊழியத்தின் யாதொரு பிரிவைச் சேர்ந்தவர்களாய்த் தங்களுடைய ரிஸெர்வ் ஊழியத்தைப் பூர்த்தி செய்திருப்பவர்களின் பெயர்களும் முன்னதாய் ரெஜிஸ்டர் செய்யப்படும்.

5. ஊழிய சம்பந்தமான ஷரத்துகள்.—(a) இந்திய ஆபிஸர்களாயிருந்தவர்கள் - தாங்கள் பென்ஷன் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தைவிட்டு நீங்கும்போது நிலையான எந்த அந்தஸ்தை வகித்திருந்தார்களோ அந்த அந்தஸ்தில் மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவார்கள். ஆயினும், அவர்கள் - அவர்களுடைய அந்தஸ்தையும் ஸீனியாரிடியையும் கிரமமாய்க் கவனிக்கையில், எந்த அலுவல்களைச் செய்ய அவர்கள் தகுதியானவர்களென்று அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கும் ட்ரெய்னிங் பட்டாலியன் கம்மாண்டிங் ஆபிஸர் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த அலுவல்களைச் செய்ய அமர்த்திகொள்ளப்படுவார்கள். மேலும், அவர்கள்- நிலையான யூனிட்டுகளில் தாங்கள் வகிக்கும் உத்தியோகங்களைப் போன்ற உத்தியோகங்கள் வகிக்கிறவர்கள் பெறுகிறதைப்போலவே (முறையே இந்திய காரிஸன் கம்பெனிகள் அல்லது ட்யூடி கம்பெனிகளுக்குரிய யுத்த சிப்பந்திகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ராங்குகளுக்கும் நம்பர்களுக்கும் உட்பட்டு) தாங்கள் வகிக்கும் உத்தியோகத்தின் சம்பளத்தையும் வர்த்தனைகளையும் பெறுவார்கள்.*

இந்திய நன்கம்மிஷண்ட் ஆபிஸர்களாயிருந்தவர்களும் ஸிப்பாய்களும் - முந்தி அவர்கள் வகித்திருந்த அந்தஸ்தையும் வேலையில் மறுபடியும் அமர்த்திக்கொள்ளப்படும்போது அவர்களுக்குள்ள யோக்கியதாம்சங்களையும் நோக்கும்போது மிகவும் தகுதியாயுள்ளதென்று எண்ணப்படும் அந்தஸ்தில் மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுவார்கள்.

(b) யுத்தம் நடக்கும் காலத்திலும் (அல்லது விசேஷ அவசியம் ஏற்பட்டிருக்கிறவரையிலும்), அதற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் அல்லது மறுபடியும் தாக்கல் செய்யப்படும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதகாலத்துக்கு அவர்கள் ஊழியம் செய்யவேண்டியதாயிருந்தால் அந்த பன்னிரண்டு மாதகாலத்துக்கும் அவர்கள் ஊழியம் செய்யவேண்டியிருக்கும்.

(c) K-1162 என்று குறிப்பிட்டிருக்கும் இந்திய ராணுவ நமூனாவில் ஆள்களின் பெயரைத் தாக்கல்செய்வதோடு அத்தாட்சிக் கையெழுத்தும் வாங்கவேண்டும். ஆள்களின் பெயரைத் தாக்கல் செய்தவுடனே அத்தாட்சிக் கையெழுத்து வாங்கவேண்டும்.

(d) சிப்பந்தியைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமாயிருப்பதை அனுசரித்து, இந்திய கம்மிஷண்ட் ராங்கிலும் நன்கம்மிஷண்ட் ராங்கிலும் அந்த ராங்குகளுக்கும் சேவகத்தில் உள்ளவர்களை உயர்த்தலாம்.

(e) காரிஸன் கம்பெனிகள் - யுத்த களத்தில் ஊழியம் செய்வதற்காகிலும் இந்தியா - பர்மா ஆகிய இவைகளின் எல்லைகளுக்கு அப்பாலாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படமாட்டா.

6. இன்னின்ன வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் இருக்கவேண்டுமென்பது.—காரிஸன் கம்பெனி

* குறிப்பு.—சம்பளம் பாதிக்கப்படாமலிருக்கும் வரையில், யாதொரு இந்திய காரிஸன் கம்பெனி அல்லது ட்யூடி கம்பெனியின் யுத்த சிப்பந்தியைச் சேர்ந்த குறித்த சில உத்தியோகங்களைப் பொறுத்தமட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ராங்குகளின் விஷயத்தில் மாத்திரமே ஷை நடவடிக்கை முறையினின்றும் மாறி நடவடிக்கை நடத்தலாம்; உதாரணமாக, பிரஸ்தாப கம்பெனியிலிருக்கும் இரண்டு ப்ளடூன் - கம்மாண்டர் உத்தியோகங்களும் ஸுபேதாரின் அந்தஸ்து உடையவைகளாயிருந்து, அந்த உத்தியோகங்களை முன்னே அதிக ஸீனியர் ஸுபேதார்களாயிருநதவர்களைக் கொண்டு ஏற்கனவே பூர்த்தி செய்திருக்கும்பட்சத்தில், யாதொரு ஸுபேதாருக்கு ஜமேதாரின் சம்பளம் கொடுத்து ப்ளடூன் கம்மாண்டராக மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்ளலாம்.

களிலும் ட்யூடி கம்பெனிகளிலும் இன்னின்ன வகுப்புகள் இருக்கவேண்டுமென்பது - சாத்தியமானமட்டில், எந்த ரெஜிமென்டுடன் அவை சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ அல்லது சேர்ந்தவைகளாயிருக்கின்றனவோ அந்த ரெஜிமென்டிலுள்ள போர்ச்சேவகம் புரியும் பட்டாலியன்களின் அமைப்புக்கு ஒத்திருக்கும். கம்பெனிகளில் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் இன்ன வீதாசாரப்படி இருக்கவேண்டுமென்பதை, ட்ரெய்னிங் பட்டாலியன் கம்மாண்டர் யுக்தானுசாரமாய்த் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டுவிட்டிருக்கிறது.

7. **சம்பளமும் வர்த்தனைகளும்.**—(a) காரிஸன் கம்பெனியின் கம்மாண்டிங் ஆபிஸரானவர் ரெஜிமென்டின் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு ஆபிஸருக்குக் கொடுக்கப்படக்கூடிய சம்பளம் பெற பாத்தியதை உடையவராவார்.

(b) வாஸ்தவத்தில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும்போது, இந்திய காரிஸன் கம்பெனிகள் ட்யூடி கம்பெனிகள் ஆகிய இவைகளின் இந்திய ஆபிஸர்களும் இதர ராங்குகளும் அடியிற்கண்டபடி பிரதிபலன் பெற பாத்தியதை உடையவர்களாவார்கள் :—

(i) இந்திய இன்பன்ட்ரி வீதங்களின்படி ராங்குக்குரிய சம்பளம் ;

(ii) ஷை சம்பளத்துடன்கூட எற்கனவே சம்பாதித்திருக்கும் பென்ஷன் ;

(iii) மேற்சொல்லியவைகளுடன்கூட நல்ல ஊழியம் நல்ல நடத்தை அல்லது திறமைக்காக கொடுக்கப்படும் சம்பளம்—(a) ஸிப்பாய் அந்தஸ்தில் ஊழியம் செய்துவரும் காலத்திலே, வேலையிலிருந்து அனுப்பிவிடப்படுவதற்கு அடுத்து முந்திய காலத்தில் நல்ல நடத்தை அல்லது திறமைக்காக எந்த வீதப்படி சம்பளம் பெற பாத்தியதையுடையவராயிருந்தாரோ அந்த வீதப்படி நல்ல நடத்தை அல்லது திறமைக்காக சம்பளம். (b) நன்கம்மிஷண்ட் ராங்குக்கு உயர்த்தப்படுவதன்மேல், போர்ச்சேவகம் செய்பவர்களின் ஜாபிதாவில் சேர்ந்திருக்குமபோது படைவீரருடைய யோக்கியதையையும் ஊழியத்தையும் யாதொரு ஸிப்பாயின் யோக்கியதையாகவும் ஊழியமாகவும் பாவித்தால் அவர் பெறுவதற்குப் பாத்தியதையுடையவராயுள்ள நல்ல ஊழியத்துக்காகக் கொடுக்கப்படும் சம்பளம் அல்லது நல்ல நடத்தைக்காகக் கொடுக்கப்படும் சம்பளம் ஆகிய இவைகளில் எது அதிக அனுகூலமாயிருக்கிறதோ அந்த சம்பளம்.

வாஸ்தவத்தில் ஊழியம் செய்யவரும்படி அழைக்கப்படும்போது காரிஸன் கம்பெனிகளில் செய்யப்படும் ஊழியமானது-நல்ல நடத்தைக்காகக் கொடுக்கப்படும் சம்பளத்தை உயர்த்துவதோ நல்ல ஊழியத்துக்காகக் கொடுக்கப்படும் சம்பளத்தை உயர்த்துவதோ எது சம்பந்தப்பட்ட நபருக்கு மிகவும் அனுகூலமாயிருக்குமோ அந்தப்படி உயர்த்துவதற்கு அர்ஹதை உண்டாக்கும் ஊழியமாகக் கொள்ளப்படும்.

(c) எற்கனவே பென்ஷன் சம்பாதிக்கப்பட்டிராத விஷயங்களிலே, காரிஸன் கம்பெனிகளிலும் ட்யூடி கம்பெனிகளிலும் செய்யும் ஊழியமானது பென்ஷன் பெறுவதற்கு அர்ஹதை உண்டாக்கும் ஊழியமாகக் கொள்ளப்படும். ஆனல், எற்கனவே பென்ஷன் சம்பாதிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், யாதொரு உயர்ந்த வீதப்படி பென்ஷன் பெறக்கூடியதாய்ச் செய்வதாக ஷை ஊழியத்தைக் கொள்வதற்கு எந்த விஷயத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

(d) அடியிற்கண்ட கம்பெனி வர்த்தனைகள் கொடுக்கப்படத்தக்கவையாகும் :—

(i) புத்தகங்கள், காகிதம், பேனு முதலியவை வாங்குவதற்காக முதலில் கொடுக்கப்படும் தொகையாகிய 30 ரூபாய்.

(ii) மாதாந்த வர்த்தனையாக 30 ரூபாய். அடியிற்கண்ட திட்டங்களுக்குட்பட்டு இந்த வர்த்தனைகள் வாங்கப்படும் :—

(a) கம்பெனி எற்படுத்தப்படும்போது முதலில் கொடுக்கப்படும் ஷை வர்த்தனை.

(b) கம்பெனியில் 50 பேர் தாக்கல் செய்யப்பட்டானவுடனே மாதாந்த வர்த்தனையில் பாதியும், 100 பேர் தாக்கல் செய்யப்பட்டானவுடனே முழு வர்த்தனையும்.

8. **தின போஜனப்படி.**—வேலையில் அமர்ந்திருக்கும்போது, இந்திய சேனைக்குக் கொடுப்பதைப்போலவே தின போஜனப்படி இலவசமாகக் கொடுக்கப்படும்—இந்திய ஆர்மி ஸெர்விஸ் கோரால் வெளிவிடப்பட்டிருக்கும் தின போஜனப்படி, சர்ப்பரா ஆகிய இவைகளின் வீத நிர்ணயத்தைப் பார்க்கவும்.

9. **பிரயாணங்கள்.**—தங்களுடைய வாசஸ்தலத்திலிருந்து யூனிட்டுக்கும், சேனை கலைத்துவிடப்படும்போது யூனிட்டிலிருந்து தங்களுடைய வீடுகளுக்கும் ரெயில், ரஸ்தா, ஆறு, சமுத்திரம் ஆகிய இவைகள் மார்க்கமாக இலவசமாய்ப் பிரயாணம் செய்யலாம்.

10. **பர்லோவும் ரஜாவும்.**—காரிஸன் கம்பெனிகளிலும் ட்யூடி கம்பெனிகளிலும் முதல் வருஷம் ஊழியம் செய்யும்போது காஷுயல் லீவ் என்னும் ரஜா மாத்திரமே கொடுக்கப்படத்தக்கதாகும். அதற்குப் பிறகு முறையே கம்பெனி அல்லது பட்டாலியன் கம்மாண்டிங் ஆபிஸருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி இரண்டு வருஷத்துக்கொருதடவை இரண்டுமாத பர்லோ கொடுக்கப்படலாம்.

சேனை கலைத்துவிடப்படுவதன்மேல், முழு அலுவலின்மேலிருக்கும்போது கொடுக்கப்படும் சம்பளத்தோடு ஒரு மாத ரஜா கொடுக்கப்படும்.

11. **தண்டோடேகூடப் போகிறவர்கள்.**—அந்தந்த பிரதேசத்தில் எந்த சம்பள வீதங்களின்படி இவர்கள் கிடைப்பார்களோ அந்த வீதங்களில் மிகக் குறைவாயுள்ள வீதங்களின்படி, 2-ம் வகுப்பைச் சேர்ந்த தண்டோடுகூடப் போகிறவர்களாக அவர்களை அமர்த்திக்கொள்ளவேண்டும் [1922-ம் ஹீத்து 287-ம் நெ. (இந்திய) ஆர்மி இன்ஸ்ட்ரக்ஷன்].

12. **முஸ்தீதும் உடையும்.**—உடைக்காக வர்த்தனை எதுவும் கொடுக்கத்தக்கதாகமாட்டாது. பீல்ட் ஸெர்விஸ் மானுயல் என்னும் புத்தகத்தில் விதித்திருக்கிற வீதங்களின்படி உடையும் முஸ்தீதும் கொடுக்கப்படும். மேலும், அவை கவர்ன்மென்டின் சொத்தாகவே இருந்துவரும்.

13. டைப் ரைட்டர்கள்.—காரிஸன் கம்பெனியின் கம்மாண்டன்ட் கேட்பதன்மேல், கல்கத்தாவிலிருக்கும் ஸ்டேஷனரி டெப்யுடி கன்ட்ரோலரால் ஒரு டைப் ரைட்டர் சர்ப்பரா செய்யப்படும்.

14. நிஷ்கரிஷையான காலத்துக்கோருமுறை சரி பார்ப்பது.—இந்திய காரிஸன் கம்பெனிகளிலும் ட்யூடி கம்பெனிகளிலும் அலுவல் செய்வதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் சகல நபர்களையும் பிரதேச கவர்ன்மென்டார் வருஷா வருஷம் சரிபார்ப்பார்கள். அந்தப்படி சரி பார்க்கும்போது, கடைசியாய்த் தெரியவந்திருக்கும் மேல்விலாசங்களைக் காட்டும் பெயர்வாரி ஜாபிதாக்களை அனுசரித்துச் சரிபார்க்கவேண்டும். இந்த ஜாபிதாக்களை, ஒவ்வொரு வருஷமும் எப்ரல்மீ 1உயன்று ட்ரெய்னிங் பட்டாலியன்களின் கம்மாண்டிங் ஆபிஸர்கள் பிரதேச கவர்ன்மென்டுகளுக்குச் சர்ப்பரா செய்வார்கள். பாடியாலா, காஷ்மீர், க்வாலியர் என்னும் இந்திய சமஸ்தானங்களில் வாசஞ் செய்பவர்களின் விஷயத்திலே, ஷை சரிபார்க்கும்வேலையானது ட்ரெய்னிங் பட்டாலியன்களின் கம்மாண்டிங் ஆபிஸர்களால் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவர்களுக்கு பதில் வருவதற்காக ஏற்கனவே கட்டணம் செலுத்தி அனுப்பப்பட்டுள்ள தபால் கார்டுகள் மூலமாய் நடத்தப்படும்.

இந்திய காரிஸன் கம்பெனிகளை ட்ரெய்னிங் பட்டாலியன்களுக்குப் பிரித்து அனுப்புவது.

யூனிட்.	இடம்.	கம்மாண்டுகளுக்குப் பங்கிடு செய்யப்பட்டிருக்கும் கம்பெனிகளின் சங்கியை.	யூனிட்டுகளுக்குக் கம்பெனிகளைப் பிரித்து அனுப்புவது.
நார்தேர்ன் கம்மாண்ட்.			
1-வது பஞ்சாப் ரெஜிமென்ட்.	ஜீலம் ...		2
8-வது பஞ்சாப் ரெஜிமென்ட்	லாகூர் ...		2
11-வது ஸீக் ரெஜிமென்ட்.	நௌஷேரா		2
12-வது எப். எப். ரெஜிமென்ட்.	ஸியால்கோட்.		2
13-வது எப். எப். ரெஜிமென்ட்.	ஆபொட்டாபாத்.		2
14-வது பஞ்சாப் ரெஜிமென்ட்.	பெரோஸ்பூர்.	21	2
15-வது பஞ்சாப் ரெஜிமென்ட்.	அம்பாலா.		2
16-வது பஞ்சாப் ரெஜிமென்ட்	மூல்டான்.		1
17-வது டோக்ரா ரெஜிமென்ட்.	ஜலந்தர் ...		2
கோர் ஹெட்க்வார்ட்டர்கள்—ஸீக் பயனீர்ஸ்.	ஸியால்கோட்.		2
			19*
ஈஸ்டேர்ன் கம்மாண்ட்.			
2-வது பஞ்சாப் ரெஜிமென்ட்.	மீரட் ...		2 (a)
7-வது ராஜ்புட் ரெஜிமென்ட்.	படேகார் ...		1 (b)
4-வது/ 9-வது ரெஜிமென்டுகள்.	பரீலி ...		3 (c) (d)
18-வது ஆர். கார்வால் ரைபில்ஸ்.	லான்ஸ்டௌன்.	2	1
19-வது ஹைதராபாத் ரெஜிமென்ட்.	பனாரெஸ் ...		2 (d)
			9
ஸதேர்ன் கம்மாண்ட்.			
5-வது மராட்டா எல் ஐ.	பெல்காம்.		3
6-வது ராஜ்புடானா ரைபில்ஸ்	நாஸிராபாத்.		1
கோர் ஹெட்க்வார்ட்டர்கள்—மதராஸ் பயனீர்ஸ்.	பங்களூர்.	11	3
கோர் ஹெட்க்வார்ட்டர்கள்—பம்பாய் பயனீர்ஸ்.	கர்க்கி.		1
			8†
வெஸ்டேர்ன் கம்மாண்ட்.			
10-வது பலூச்சி ரெஜிமென்ட்.	கராச்சி ...	1	1
பர்மா டிஸ்ட்ரீக்ட் கம்மாண்ட்.			
20-வது பர்மா ரைபில்ஸ்.	மெய்மியொ.	3	1‡
	மொத்தம்.	38	38

* நார்தேர்ன் கம்மாண்டில் ஊழியம் செய்வதற்காக இரண்டு கம்பெனிகள் ஈஸ்டேர்ன் கம்மாண்டால் பங்கிடு செய்யப்பட்டிருக்கின்றன.

ஸி. டபில்யு. இ. காட்டன்,
சீவ் ஸெக்ரெடரி.

(a) நார்தேர்ன் கம்மாண்டில் ஊழியம் செய்வதற்காக.

(b) ஸதேர்ன் கம்மாண்டில் ஊழியம் செய்வதற்காக.

(c) ஸதேர்ன் கம்மாண்டில் ஊழியம் செய்வதற்காக இரண்டு கம்பெனிகள்.

(d) பர்மாவில் ஊழியம் செய்வதற்காக ஒரு கம்பெனி.

† ஸதேர்ன் கம்மாண்டில் ஊழியம் செய்வதற்காக மூன்று கம்பெனிகள் ஈஸ்டேர்ன் கம்மாண்டால் பங்கிடு செய்யப்பட்டிருக்கின்றன.

‡ பர்மா டிஸ்ட்ரிக்டில் ஊழியம் செய்வதற்காக இரண்டு கம்பெனிகளுக்கு ஈஸ்டேர்ன் கம்மாண்டால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

லா டிபார்ட்மெண்ட்

(ஜெனரல்).

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ டிஸெம்பர் ௴ 1௳.

நெ. 983.—1923-ம் ௵ மார்ச் ௴ 20௳ யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும் பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1931-ம் ௵ ஜனவரி ௴ 9௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலே கண்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப் பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது :—

மசோதா திருத்தம்.

ஷை விதிகளைச் சேர்ந்த 14-வது விதியின் கீழிருக்கும் (2) குறிப்பிட்ட திட்டத்தின் கடைசியிலே, அடியிற்கண்ட வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“ நான்கு சக்கரங்களுக்கு ப்ரேக்குகள் அமைக்கப்பட்ட யாதொரு மோடார் வண்டியின் விஷயத்தில், இந்த நான்கு ப்ரேக்குகளும் ஒன்றுவிட்டொன்றாக இயங்கும் யந்திர அமைப்பைக்கொண்டு இயக்கக்கூடியவையாயிருந்தால் போதுமானதாகும். ”

எ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி

டெவெலப்மென்ட் டிபார்ட்மென்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ நவம்பர் ௴ 27௳ (2128-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 366.—(1925-ம் ௵த்து 12-வது ஆக்டாகிய) பஞ்சுவிதை எடுக்கும் தொழிற்சாலைகளையும் பஞ்சை அழுத்தும் தொழிற்சாலைகளையும் குறித்த 1925-ம் ௵த்து ஆக்ட் 13-வது பிரிவைச் சேர்ந்த (f) குறிப்பிட்ட பகுதியின்படி, சென்னை கவர்ன்மென்டார்-அவரவர்கள் விசாரணை அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் இருக்கும் பஞ்சுவிதை எடுக்கும் சகல தொழிற்சாலைகளிலும் பஞ்சை அழுத்தும் சகல தொழிற்சாலைகளிலும் பிரவேசித்து அவைகளைப் பார்வையிடுவதற்கு ஜில்லா விவசாய உத்தியோகஸ்தர்களுக்குக் களிகூர்ந்து அதிகாரம் கொடுக்கிறார்கள்.

எஸ். வி. ராமமூர்த்தி,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.